பக்கங்கள் :எட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 09 சனிக்கிழமை (23.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 206

பருத்தித்துறை மோதலில் மீட்கப்பட்ட சடலங்களை கடல்வழியாக புலிகளிடம் கையளிக்க முயற்சி

கிளிநொச்சி, ஜூன் 23

பருத்தித்துறை கடற்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடற்சமரில் உயிரிழந்த நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை கடல் வழியாக எடுத்துச் சென்று ஒப்படைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியவந்தது.

கடற்சண்டையின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட நான்கு பேரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் கையளிக்குமாறு பாதுகாப்புப் படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரியிருந்தனர். இது தொடர்பாக விடுதலைப் (08ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரி 29ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 23

தமிழ் மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் இரண்டாவது தடவையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி வரை தேர்தல்களை ஒத்திவைக்கும் அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று விடுத்துள்ளார்.

தமிழ் மாவட்டங்களின் அரச அதிபர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர்கள் தெரிவித்த கருத்துகளை ஏற்று அவர் மேற்படி முடிவை மேற்கொண்டதாக அறியப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 30ஆம் திகதி நாடாளாவிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் (08ஆம் பக்கம் பார்க்க)

ஊடகவியலாளரின் பாதுகாப்புக் குறித்த அச்சம்

இலங்கையில் அதிகரித்து வரும் பாதகமான போக்கு

சர்வதேச ஊடக அமைப்புகளின் ஆய்வுக்குழு அறிக்கை

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் சமீப காலமாக ஊடகத்துறையினர் மீது பலமுனைகளிலிருந்தும் விடுக்கப்படும் பல்வேறுவிதமான அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் காரணமாக இங்கு பணியாற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பான அச்சம் அதிகரித்துவருகின்றது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் இன்றைய நிலையை நேரில் வந்து மதிப்பீடு செய்த சர்வதேச ஊடக அமைப்புகளின் ஆய்வுக்குழு ஒன்று தனது அறிக்கையில் இப்படித் தெரிவித்திருக்கின்றது.

உலகின் முன்னணி ஊடக உரிமை பேணும் பதினொரு அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஆய்வுக்குழு ஒன்று கடந்த சில தினங்களாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தங்கியிருந்து ஊடக சுதந்திரத்தின் நிலையை மதிப்பீடு செய்தது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம், சர்வதேச ஊடகத் துறை ஆதரவு அமைப்பு, சர்வதேச (08ஆம் பக்கம் பார்க்க)

நேற்றுமுதல் ஊரடங்கு இரு மணிநேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

குடாநாட்டில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் இருமணி நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுதல் மறு அறிவித்தல்வரை இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்தமாதம் 17 ஆம் திகதி முதல் இரவு 8 மணிமுதல் (08ஆம் பக்கம் பார்க்க)

உலகில் பத்திரிகைப் பணி புரிவதற்கு மிக ஆபத்தான இடம் யாழ்ப்பாணம்!

கொழும்பு, ஜூன் 23

பத்திரிகையாளர் பணி செய்வதற்கு உலகிலேயே மிக மோசமான - ஆபத்தான - இடம் யாழ்ப்பாணம்தான்.

- இவ்வாறு சர்வதேச பத்திரிகை அமைப்புகள் மதிப்பீடு செய்திருக்கின்றன.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவை குறித்து மதிப்பீடு செய்ய வந்திருந்த சர்வதேச ஊடக சம்மேளனங்கள் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது இத் தகவல் வெளியிடப்பட்டது.

கடந்த ஆறு நாள்களாக யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று ஊடக சுதந்திரம் குறித்து இந்தச் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் நேரில் கண்டறிந்தனர். அதன் பின்னர் குழுவின் மதிப்பீட்டு அறிக்கை நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அது தொடர்பான செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்படி பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் குறித்து இவ்வாறு தெரிவித்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

அதிபர் சேவை வகுப்பு 3 நேர்முகப் பரீட்சை 6இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் சுட்டிலக்க விவரம் 2ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. (1)

பேசாலையில் பிஸ்டல் குழு சூடு கடற்படைச் சிப்பாய் உயிரிழப்பு

அச்சத்தினால் மக்கள் பாதுகாப்புத் தேடினர்

மன்னார், ஜூன் 23

நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில் மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரி பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது பிஸ்டல் குழுவினர் எனச் சந்தேகிக்கப்படுவோர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார். தாக்குதல் சம்பவத்தை அடுத்து அச்சம் காரணமாக அப்பகுதியில் உள்ள அநேக மக்கள் உறவினர் வீடுகளிலும் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்

(08ஆம் பக்கம் பார்க்க)

நிலாவெளி கடற்பரப்பில் படகு வெடித்துச் சிதறியது

திருகோணமலை நிலாவெளி கடற்பரப்பில் நேற்று கடற்சமர் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடற்புலிகளின் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் தொடுத்ததை அடுத்து மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடற்புலிகளின் படகு ஒன்று வெடித்துச் சிதறியதில் அதில் இருந்த கடற்புலி உறுப்பினர்கள் மூவர் உயிரிழந்தனர் என்று கடற்படைப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் உபாலி ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். புலிகளின் பெண் உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவரது சடலம் கடலில் மிதப்பதாகவும் கடற்படை தெரிவித்திருக்கிறது.

தாக்குதல் நடத்துவதற்காக வந்த புலிகளின் வெடிகுண்டுப் படகு குறித்த நேரத்துக்கு (08ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டனிடம் கொள்வனவு செய்திருந்த அதிவேகப் படகை விற்க அரசு முடிவு

கொழும்பு, ஜூன் 23

பிரிட்டனிடம் இருந்து 1998ம் ஆண்டு பெரும் பணச்செலவில் கொள்வனவு செய்யப்பட்ட அதிவேக தரையிறங்கு கலத்தை (Hoover Craft) விற்பனை செய்வதற்கு அரசு கேள்விப் பத்திரம் கோரியுள்ளது.

250 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தக் கலம் கொள்வனவு செய்த காலத்தில் இருந்து இரு வருடங்கள் மட்டுமே கடற்படையில் இணைந்து சேவையில் ஈடுபட்டது.

அதன்பின்னர் இந்தக் கலம் கடற்படைக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விளம்பரத்துக்கு பயன்படுத்தப்பட்டது.

'வெள்ளை யானை' என்று அழைக்கப்படும் இக்கலம் ஒரே தடவையில் 56 துருப்புக் (08ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீல.சு.க. - மக்கள் பிரிவு என்ற புதிய கட்சி பண்டா சமாதிக்கு முன் அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜூன் 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு நேற்றுக் காலை ஹொரகொல்லையிலுள்ள அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க சமாதிக்கு அஞ்சலி செலுத்தியதன் பின் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கட்சியின் முக்கியஸ்தர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோருடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். இவ்வைபவத்தில் மாகாண சபைகள், நகர, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஹொரகொல்லையிலுள்ள அமரர் பண்டாரநாயக்க சமாதியில் மங்களசமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி எம். பிக்கள் உட்பட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் பலர் மலரஞ்சலி செலுத்தினர்.

இங்கு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் மங்கள (08ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் வெளியேற்றம் குறித்த மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 23

கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மீதான வழக்கு நேற்று உயர் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய ஜோதி சரவணமுத்து மற்றும் தமிழ் வர்த்தகர் ஒருவரும் தாக்கல் செய்த மனுக்களே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

நீதியரசர்களான நிகால் ஜயசிங்க, ராஜ பெர்னாண்டோ, ஜகத்பாலபட்டபென்டி ஆகிய மூவரைக்கொண்ட ஆயத்தின் முன்னிலையில் இந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது

ஏற்கனவே, இந்த மனு தொடர்பாக தமிழர்கள் வெளியேற்ற எடுக்கப்பட்ட முடிவுக்கு இடைக்காலத் தடை உத்தரவு (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சேவை வகுப்பு-3 நேர்முகப் பரீட்சை; யாழ்.மாவட்டத்தில் 527 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு எதிர் வரும் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் பணிமனையிலும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையிலும்-

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிமனையிலும்-

மன்னார் மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் மன்னார் வலயக்கல்விப் பணிமனையிலும்-

நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து 527 பேரும், மன்னாரிலிருந்து 75 பேரும், வவுனியாவிலிருந்து 209 பேரும், கிளிநொச்சி / முல்லைத்தீவில் இருந்து 151 பேரும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்டவர்களின் சுட்டிலக்கங்கள் வருமாறு :-

101338, 101446, 760092, 1300014, 1300028, 1300031, 1300045, 1300059, 1300062, 1300076, 1300080, 1300093, 1300105, 1300119, 1300122, 1300136, 1300140, 1300153, 1300167, 1300170, 1300184, 1300198, 1300200, 1300213, 1300227, 1300230, 1300244, 1300258, 1300261, 1300275, 1300289, 1300292, 1300304, 1300318,1300321,1300335, 1300349, 1300352, 1300366, 1300370, 1300383, 1300397, 1300409, 1300412, 1300426, 1300430, 1300443, 1300457, 1300460, 1300474, 1300488, 1300491, 1300517, 1300520, 1300534, 1300548, 1300551, 1300565, 1300579, 1300582, 1300596, 1300608, 1300611.

1300625, 1300639, 1300642, 1300656, 1300660, 1300673, 1300687, 1300690, 1300702, 1300716, 1300720, 1300733, 1300747, 1300750, 1300764, 1300778, 1300781, 1300795, 1300807, 1300810, 1300824, 1300855, 1300869, 1300872, 1300886, 1300890, 1300901, 1300915, 1300929, 1300932, 1300946, 1300950, 1300963, 1300977, 1300980, 1300994, 1301006, 1301010, 1301023, 1301037, 1301040, 1301054, 1301068, 1301071, 1301085, 1301099, 1301100, 1301114, 1301128, 1301131, 1301145, 1301159, 1301162, 1301176, 1301180, 1301193, 1301205, 1301219, 1301222, 1301236, 1301240, 1301253, 1301267, 1301270, 1301284, 1301298, 1301300, 1301313, 1301327, 1301330.

1301344, 1301358, 1301361, 1301375, 1301389, 1301392, 1301404, 1301418, 1301421, 1301435, 1301449, 1301452, 1301466, 1301470, 1301483, 1301497, 1301509, 1310010, 1310024, 1310038, 1310041, 1310055, 1310069, 1310072, 1310086, 1310090, 1310101, 1310115, 1310129, 1310132, 1310146, 1310150, 1310163, 1310177, 1310180, 1310194, 1310206, 1310210, 1310223, 1310237, 1310240, 1310254, 1310268, 1310271, 1310285, 1310299, 1310300, 1310314, 1310328, 1310331, 1310359, 1310362, 1310376, 1310380, 1310393, 1310405, 1310419, 1310422, 1310436, 1310440, 1310453, 1310467, 1310470, 1310484, 1310498, 1310500, 1310513, 1310527, 1310530, 1310544, 1310558, 1310561.

1310575, 1310589, 1310592, 1310604, 1310618, 1310621, 1310649, 1310625, 1310666, 1310670, 1310683, 1310697, 1310709, 1310712, 1310726, 1310730, 1310743, 1310757, 1310760, 1310774, 1310788, 1310791, 1310803, 1310817, 1310820, 1310834, 1310848, 1310851, 1310865, 1310879, 1310882, 1310896, 1310908, 1310911, 1310925, 1310939, 1310942, 1310956, 1310960, 1310973, 1310987, 1310990, 1311002, 1311016, 1311020, 1311033, 1311047, 1311050, 1311064, 1311078, 1311095, 1311107, 1311110, 1311124, 1311138, 1311141, 1311155, 1311169, 1311172, 1311186, 1311190, 1311201, 1311215, 1311229, 1311232, 1311246, 1311250, 1311263, 1311277, 1311280.

1311294, 1311306, 1311310, 1311323, 1311337, 1311340, 1311354, 1311368, 1311371, 1311385, 1311399, 1311400, 1311414, 1311428, 1311431, 1311445, 1311459, 1311462, 1311476, 1311480, 1311493, 1311505, 1320017, 1320020, 1320034, 1320048, 1320051, 1320065, 1320079, 1320082, 1320096, 1320108, 1320111, 1320125, 1320139, 1320142, 1320156, 1320160, 1320173, 1320190, 1320202, 1320216, 1320220, 1320233, 1320247, 1320250, 1320264, 1320278, 1320281, 1320295, 1320307, 1320310, 1320324, 1320338, 1320341, 1320355, 1320369, 1320372, 1320386, 1320390, 1320401, 1320415, 1320429, 1320432, 1320446, 1320450, 1320463, 1320477, 1320480, 1320494, 1320506.

1320510, 1320523, 1320537, 1320540, 1320554, 1320568, 1320571, 1320585, 1320599, 1320600, 1320614, 1320628, 1320631, 1320645, 1320659, 1320662, 1320676, 1320680, 1320693, 1320705, 1320719, 1320722, 1320736, 1320740, 1320753, 1320767, 1320770, 1320784, 1320798, 1320800, 1320813, 1320827, 1320844, 1320858, 1320861, 1320875, 1320889, 1320892, 1320904, 1320918, 1320921, 1320935, 1320949, 1320952, 1320966, 1320970, 1320983, 1320997, 1321009, 1321012, 1321026, 1321030, 1321043, 1321057, 1321060, 1321074, 1321088, 1321091, 1321103, 1321117, 1321120, 1321134, 1321148, 1321151, 1321165, 1321179, 1321182, 1321196, 1321208, 1321211, 1321225.

1321239, 1321242, 1321256, 1321260, 1321273, 1321287, 1321290, 1321302, 1321316, 1321320, 1321333, 1321347, 1321350, 1321364, 1321378, 1321381, 1321395, 1321407, 1321410, 1321424, 1321438, 1321441, 1321455, 1321469, 1321472, 1321486, 1321490, 1321501, 1330013, 1330027, 1330030, 1330044, 1330058, 1330061, 1330075, 1330089, 1330092, 1330104, 1330118, 1330121, 1330135, 1330149, 1330152, 1330166, 1330170, 1330183, 1330197, 1330209, 1330212, 1330226, 1330230, 1330243, 1330257, 1330260, 1330274, 1330288, 1330291, 1330303, 1330317, 1330320, 1330334, 1330348, 1330351, 1330365, 1330379, 1330382, 1330396, 1330408, 1330411, 1330425, 1330439, 1330442.

மூத்த எழுத்தாளர் சு.வே. காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஈழத்தின் மூத்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான சு.வே., தமது 87 ஆவது வயதில் நேற்றுக் கொழும் பில் காலமானார்.

சிறுகதைகள், நாடகங்கள், வானொலி நாடகங்கள் என்று சகல துறைகளிலும் எழுதிக் குவித்த சு.வே. தமது உருவகக் கதைகளால் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்பு முத்திரை பதித்தவர்.

ஈழகேசரி காலத்தில் இருந்து எழுதத் தொடங்கிய இவர் சுமார் அரை நூற்றாண்டு காலமாகத் தமது இலக்கியப் பங்களிப்பைச் செய்து வந்தார். இத்துறையில் பல பரிசில்களையும் பெற்றவர்.

சு.வே. என அறியப்பட்ட அவரின் இயற்பெயர் சு.வேலுப்பிள்ளை ஆகும். நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பண்டிதரான அவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் அபிமானத்தைப் பெற்ற மாணாக்கரில் ஒருவர். தமிழகத்தின் மூத்த எழுத்தாளர் ராஜாஜியின் பாராட்டையும் பெற்றவர்.

ஈழத்தின் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் நிறைய எழுதியவர். தமது நாடகத்துறையிலும் தமக்கென தனித்துவமான இடம் பெற்றிருந்தார். இலங்கைப் பாடநூல் சபையில் நீண்டகாலம் நூலாக்க எழுத்தாளராகப் பணிபுரிந்தவர்.

அவர் உயிர் நீத்தாலும் அவரது இலக்கியப் பணியும் அத்துறையில் பதித்த முத்திரையும் இளஞ்சந்ததியினருக்குப் பெரும் பொக்கிஷமாக விளங்கும்.

அமரர் சு.வேயின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நாளை நடைபெறவுள்ளன. (அ)

மரண அறிவித்தல்

சண்முகநாதன் சந்திரகாந்தன்

(ஸ்தாபகர், காந்தன் கொம்பியூட்டர் சிஸ்ரம், திருநெல்வேலி)



யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் 11, மணிக்கூண்டு ஒழுங்கையைப் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சந்திரகாந்தன் சவுதி அரேபியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம், சண்முகநாதன் மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை துரையப்பா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சிறிராணியின் அன்புக் கணவரும் ஷண்கீரன் (யாழ்.இந்துக் கல்லூரி), விபூஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஐஸ்வரியா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரபிரேமா (யாழ். போதனா வைத்தியசாலை), லோகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), தில்லேஸ்வரன் விஜயநாதன் (கனடா), நிசாளினி (ராகம போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.06.2007) சனிக்கிழமை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக தெகிவளை பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
தி.சிறிதரன் (மைத்துனர்)

11, மணிக்கூண்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(61893)

தமிழர்கள் இருவர் பிரிட்டனில் கைது

பிரிட்டனில் இயங்கிவரும் தமிழ் சம்மேளனத்தில் பணியாற்றும் முக்கியஸ்தர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளின் லண்டன் கிளைப்பொறுப்பாளர் சாந்தன் என்று தெரிவிக்கப்படுகிறது.இவர்கள் இருவரும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர் என்று பிரிட்டிஷ் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இருவரும் கடந்த வருடம் ஜூலை மாதத்தில் நடத்திய நிகழ்வொன்று தொடர்பாகவே கைதுசெய்யப்பட்டனர் என்றும், இவர்கள் டுபாய் நாட்டிலிருந்து பிரித்தானியாவிற்குத் திரும்பும்வேளை விமானநிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

தபாலக ஏற்பாட்டிலான போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ். தபாலக விளையாட்டுக் கழகம் நாளை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலத்தில் நடத்தவிருந்த உதைபந்தாட்ட, மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் ஒத்திவைக் கப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்த ஆட்டங்கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

Sky Computer Systems

நீங்கள் மலிவு விலையில் கொம்பியூட்டர் ஒன்றையும்,Printer,UPS,Monitor ,போன்ற மற்றும் பொருட்களை வாங்கவும், கொம்பியூட்டர் சம்பந்தமான விடயங்களை (DTP,M/O, I/Mail, H/W,Q/Book) கற்றுக்கொள்ளவும் விரையுங்கள்

Sky Computer (Pvt) Ltd,
89,Kandy Road
Chundikkuli
Jaffna.
T.P No:-0212229109

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
யாழ் கச்சேரிக்கு அருகில்

FOR SALES

01.GIGABYTE MOTHER BOARD - 6800/=
02.SAMSUNG DVD WRITER - 5600/=
03.KINGSTON FLASH DRIVE - 1GB -1900/=
04.KINGSTON FLASH DRIVE - 2GB - 2900/=
05.56Kbps FAX MODEM - 900/=
06.MULTIMEDIA 5 SPEAKER - 850/=
07.MOUSE 200/= முதல்
மற்றும் KEY BOARD, OPTICAL MOUSE, HEAD PHONE

MUSIC WORLD
141B, பலாலி வீதி,
தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

மரண அறிவித்தல்

கந்தப்பு பூதத்தம்பி

(இளைப்பாறிய தபாலதிபர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது இல. 24, Launceston Road, Perivale, UB 6 7EU London (லண்டன்) இல் வசித்தவருமாகிய கந்தப்பு பூதத்தம்பி 20.06.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - சின்னம்மா தம்பதியரின் புதல்வரும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா வைத்தியலிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் ராஜ்குமார் (UK), ராஜி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வத்சலா (UK), இளங்கேசன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும் ரஜீவ், சுமித்தா, சர்மிலன் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி அன்னலெட்சுமி ஜெயரட்ணம் (SL), பூ.க. இராசத்தினம் (SL) காலஞ்சென்ற துரைசிங்கம் (SL), திருமதி இராசமணி கந்தசாமி (Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை (UK), திருமதி புஸ்பவதி அருந்தவநாதன் (Australia), திருமதி சரோஜினி தேவி இராசரத்தினம் (SL), திருமதி மங்கலம் துரைசிங்கம் (Canada), வைத்திலிங்கம் ஜெயக்குமார் (Australia), திருமதி வத்லாஜெயக்குமார் (Australia) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, Hendon Crematorium, Holderi Hill Road, London N.W. 71 N.B இல் நண்பகல் 12 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள் - UK
தொலைபேசி 0044 2089988450
சகோதரன் : பூ.க. இராசரத்தினம் (Wellawatte)
தொலைபேசி: 2582531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமந்தைப் பாதை மூன்று நாள்கள் திறக்கப்படுவதால் வன்னியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி,ஜூன்23

வன்னிப் பிரதேசத்திற்கான ஓமந்தை ஊடான போக்குவரத்து வாரத்தில் மூன்று நாள்களே இடம்பெறுவதால் வன்னியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

வன்னியில் நிலவும் உணவு நிலைமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வன்னிப் பிரதேசத்திற்கான ஓமந்தை ஊடான போக்குவரத்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களே தற்போது நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு வாகன அணி மூலமே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது வழமை.

கடந்த காலங்களில் வாரத்தில் ஏழு நாள்களும் ஓமந்தைப் பாதை திறக்கப்பட்டு இருந்தமையால் தேவையான பொருள்களை எடுத்துவரக் கூடியதாக இருந்தது.

வன்னிப் பிரதேசத்திற்கென ஒதுக்கப்படும் பொருள்களைத் தினமும் 30 லொறிகளில் கொண்டு செல்வது வழமை தற்போது பாதை மூன்று நாள்கள் மட்டும் திறக்கப்பட்டிருப்பதால் சோதனைகள் மேற்கொண்ட பின்னர் 10 லொறிகள் பொருள்களை மட்டுமே கொண்டு செல்ல முடிகின்றது.

இதன் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்குத் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நேற்றுமுன் தினம் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவை நேரில் சந்தித்து விளக்கமளித்துள்ளேன். அவர் இதற்குரிய நடவடிக்கையை விரைவில் எடுப்பதாகத் கூறினார்.

- இப்படி அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் இவ்விடயம் தொடர்பாகப் பசில் ராஜபக்ஷவுக்கு விளக்கமளித்ததாகவும் அவர் கூறினார்.

வன்னியின் எரிபொருள் நிலைமை தொடர்பாகக் கிளிநொச்சி அரச அதிபரிடம் கேட்டபோது, மாதாந்தம் 6 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே வழங்கப்படுகின்றது.

பெற்றோல் மற்றும் டீசல் என்பன வழங்கப்படுவதில்லை. மண்ணெண்ணெயையும் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் எடுத்துச் செல்கின்றோம்.

டீசல், பெற்றோல் எடுத்துவரப்படாத போதும் மண்ணெண்ணெய் மூலம் ஓரளவு எமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றோம்- என்று அவர் கூறினார். (1-203)

தென்மராட்சி வலயத்தில் ஆசிரிய நியமனம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்/ நிதி உதவியாளராகக் கடமையாற்றிய பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் கடந்த 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நியமனம் பெற்ற அனைத்துப் பட்டதாரிகளும் வலயத்தில் உள்ள கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (203-207)

யாழ்.சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு வங்கிக் கணக்குகள் மூலம் கொடுப்பனவுகள்

குருநகர்,ஜூன்23

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் வைத்தியசாலை ஊழியர்களின் மாதாந்த சம்பளம் அந்த ஊழியர்களின் வங்கிக் கணக்குகள் மூலம் கொடுப்பனவு செய்யப்படவுள்ளது.

உரிய காலத்தில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள வசதியாக மாதாந்த சம்பளக் கொடுப்பனவுக் கோரிக்கைப் படிவங்களை ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அவை கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறும் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (202-51)

ஒரு சில மணிநேரத்தில் பதிவுச் சான்றிதழ்களை மக்கள் பெற யாழ்.செயலகத்தில் ஏற்பாடு

ஜனவரி முதல் நடைமுறைக்குவரும் என்கிறார் பிரதிப் பதிவாளர் நாயகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

யாழ்.செயலகத்தில் இயங்கும் பதிவாளர் அலுவலகம் ஊடாக இறப்பு, பிறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ்களை ஒரு சில மணி நேரத்தில் பெறக்கூடிய வகையில் அந்தப் பணிகள் கணனி மயப்படுத்தப்படவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உதவிப்பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் உதயனுக்குத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கொழும்பில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

இதற்கென யாழ்ப்பாணத்திற்கு ஏற்ற வகையில் மென்பொருள் தயாரிக்கும் பணிகள் மனித உரிமை ஆணைக்குழுவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவை முடிவடைந்ததும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இங்கு இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் மக்கள் குறுகிய நேரத்தில் இறப்பு, பிறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெறமுடியும்.

இதற்கு முன்னோடியாக யாழ்.மாவட்டத்தில் நிகழும் இறப்பு, பிறப்பு, திருமணப் புள்ளிவிவரங்களை கணனி மூலம் கொழும்புக்கு அனுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி கடந்தவாரம் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமைகள், ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் மீள் குடியமர்ந்தோருக்குமான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்வீற்குமான விசேட செயற்திட்டத்தின் கீழ் சகலருக்கும் சான்றிதழ்கள் கிடைக்கும் வகையிலான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக சகல பதிவாளர்களுக்குமான கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் உதவிப்பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் புதிய திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். (1-203)

குடாநாட்டில் கள் விற்பனை வீழ்ச்சியுற்றதால் பனை, தென்ன வள சங்கங்கள் நஷ்டத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

குடாநாட்டில் உற்பத்தியாகும் கள்ளின் அளவிற்கேற்ப விற்பனை இடம்பெறுவதில்லை. இதனால் இங்குள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என சங்க வட்டாரத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ் வருடம் அங்கத்தவர் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப கள் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. எனினும் விற்பனை பெருமளவில் இடம்பெறாததால் தினமும் பெருமளவு போத்தல் கள் நிலத்தில் ஊற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

சில சங்கங்கள் போத்தலில் கள் அடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. ஆயினும் போத்தலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக சங்கங்களின் போத்தல் கள் உற்பத்தி இலக்கை அடைய முடியவில்லை என்றும் -

வெல்ல உற்பத்தி செய்வதற்கு விறகு வசதி மற்றும் சந்தை வாய்ப்பு குறைவு என்பதால் சங்கங்கள் வெல்ல உற்பத்தியை யும் இவ்வருடம் நிறுத்தியுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (202-207)

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன பிரிவிலுள்ள கிராய்க் குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பின்பு இடம்பெற்ற திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் நாடாவை வெட்டி சம்பிரதாயப்படி குளத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன், விவசாயிகள் சம்மேளனத் தலைவர் இ.பொ.மா.க. முதலியார் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

நயினாதீவு திருவிழாவை முன்னிட்டு விசேட சுகாதார நடவடிக்கைகள்

நயினை,ஜூன்23

நயினாதீவு திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் சுகநலன்களைக் கவனிப்பதற்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பத்தாம் திருவிழா தொடக்கம் இங்குள்ள விசேட பணிமனையில் நோயாளர் நலன்களைக் கவனிக்க நயினாதீவு சுற்றயல் கூறு பொறுப்பு வைத்திய அதிகாரி பணிக்கு அமர்த்தப்பட உள்ளார்.

அத்துடன் சப்பரம், தேர் ஆகிய திருவிழா நாள்களில் தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கை, தாய்சேய் நலன் [illegible] விழிப்புணர்வை [illegible] நோக்குடன் இங்குள்ள யாத்திரிகர் மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது - எனவும் அவர் தெரிவித்தார். (202-51)

இலவச தையல் பயிற்சி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மூன்றாவது தொகுதியினருக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பினை ஜூலை முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றி பயிற்சிகள் பெறவிரும்பும் யுவதிகள் சாவகச்சேரி பிரதான வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி வழங்குமாறு கழகத் தலைவர் லயன் வ.சிறீபிரகாஸ் அறிவித்துள்ளார். ஏற்கனவே நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் பங்கு [illegible] பூர்த்தி செய்த யுவதிகளுக்கு [illegible] 30 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணி உ.அ.அ. அலுவலகம் இடம்மாற்றம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகம் பருத்தித்துறை - மணல்காடு வீதியில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் முன்னர் பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது.

புதிய இடத்திற்கு அலுவலகம் இடம் மாற்றப்பட்டதையடுத்து, பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் உள்ள மணல்காட்டுச் சந்தியில் வழிகாட்டல் பெயர்ப் பலகை ஒன்று அமைக்கப்படவுள்ளது. (202-275)

நெல்லியடியில் சிப்பாய் காயம்

உடுப்பிட்டி, ஜூன் 23

வடமராட்சியில் நெல்லியடியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.45 மணியளவில் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இராணுவ வாகன அணிக்காக பாதை மூடப்பட்டிருந்தவேளை வயோதிபர் ஒருவர் வீதியைக் கடந்து செல்ல முற்பட்டார்.

வயோதிபரைத் தடுக்கச் சென்றவேளை, சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் காலில் கயமுற்றார். அவர் உடனடியாக பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (அ-1-155)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி: இரண்டு பேருக்கு விளக்கமறியல்

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட இருவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரினால் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைவு தொடர்பாக மட்டுவில், சாவகச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 15ஆம் திகதி இவ்வழக்குகளை விசாரித்த நீதிவான் சம்பந்தப்பட்ட இருவரையும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203-207)

பட்ட மேற்கல்வி டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் இளமானிப் பட்டம் பெற்ற கல்வியியல் துறை சார்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களிடம் இருந்து பட்ட மேற் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய நிலையங்களிலும் இப் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

ஆங்கில மொழி மூல பயிற்சிநெறி கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது. உரிய விண்ணப்பங்களை மேற்கூறப்பட்ட பிராந்திய நிலையங்களில் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் பெற்று எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார். (202-68)

ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு ஒரு தொகுதி மருந்துவகை

கட்டைவேலி ஜூன் 23

குடாநாட்டில் உள்ள ஐந்து அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு ஒரு தொகுதி மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

பருத்தித்துறை, கரவெட்டி, சங்கானை, தம்பசிட்டி, பண்டத்தரிப்பு ஆகிய அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கே மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

அவை உரிய வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. (203-275)

சிறுவர் தினத்தையொட்டி வடமராட்சி வலயத்தில் பொது அறிவுப் போட்டிகள்

கட்டைவேலி,ஜூன் 23

அனைத்துலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களிடையே நான்கு பிரிவுகளாக இப் போட்டி நடத்தப்படவுள்ளது. வடமராட்சி கல்வி வலயம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் பொது அறிவு சம்பந்தமாக எழுத்துப் பரீட்சை ஒன்றை நடத்தி, ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப்படுவார்கள். வலய மட்டத்திலும் எழுத்துப் பரீட்சை நடத்தப் பட்டு 15 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

வலய மட்டத்தில் தெரிவாகும் 15 பேரும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பிறிதொரு தினத்தில் வாய் மொழிமூலமாக வினாக்கள் கேட்கப்பட்டு போட்டி நடத்தப்படும். இப் போட்டியில் தெரிவாகும் வெற்றியாளர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (202-275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்



தர்காநகர், கல்வியல்கல்லூரி மாணியான

சண்முகராசா ஜெயந்தி

பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் 12-06-2007 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற பட்டமளிப்புவிழாவில் பட்டம் பெற்றமையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

சங்கத்தானை, சாவகச்சேரி. **சயாஸ்** (அண்ணா-லண்டன்) **அம்மா, அக்கா.**

(61865)

வலைபந்தாட்டம்

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (1-203)

கல்வி

A/L இரசாயனவியல் Chemistry Paper Class and Theory Class ஆசிரியரால் B.Sc., M.Sc. (Chemistry) தனியாகவோ குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும்.

[மானிப்பாய், உடுவில், இணுவில், கோக்குவில்.].

(61881) தொடர்பு: T.P.: 0776006579

கோழி இறைச்சி விற்பனை

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், ஊர் சேவல், கல்பேட் என்பன வேண்டிய அளவுகளில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: *மல்சி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, கல்ட்டி, யாழ்ப்பாணம்.*

(61878)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

குட்டிப்பிள்ளை செல்வனேஸ்வரன்

(இலங்கு)

24.05.2007 வியாழக்கிழமை அன்று உன்னைப் பிரிந்த துயரத்தில் - நாம் அழுத கண்ணீரின் ஈரத்துளிகள் இன்னும் காயவில்லை. முப்பத்தொரு நாள்கள் உருண்டோடிப் போனாலும் யுகங்கள் பல மாறினாலும் உன் நினைவு என்றும் எம்மை விட்டு நீங்காது எமது ஆருயிர் சகோதரனே! உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

அக்கா குடும்பத்தினர் (கிளிநொச்சி),
அண்ணாமார் குடும்பத்தினர் (ஜேர்மனி),
தம்பிமார் குடும்பத்தினர் (சுவிஸ்,லண்டன்),
மருமகள்மார் குடும்பத்தினர் (சுவிஸ்).

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

எமது மண்ணிலேயா? அதுவும் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழா?
O/L தகமையுடன் இரண்டு வருடங்களிலா ? உண்மையாகவா ?
கேட்டுக்கொண்டு இருப்பதால் மட்டும் என்ன பயன் ?

Batch ஆரம்பம்

3வது

Degree Certificates awarded by Trinity University (USA Spain)

நீங்களும் கணினிப் பட்டதாரியாகலாம்

அலுவலர்களுக்காக சனிஞாயிற்றுக் கிழமைகளில் விரிவுரைகள்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் Higher Diploma கற்கைநெறியை தொடர்ந்து பயிலமுடியாதவர்கள் எம்முடன் இணைந்து B. Sc. யை பயில முடியும்.

எமது சான்றிதழுடன் 2வது வருடத்தில் காமராஜர் பல்கலைக்கழகத்தின் PGDCA யைப் பெறலாம்

பரீட்சைகள் யாவும் எமது நிறுவனத்திலேயே நடாத்தப்படும்

கற்கைநெறியைப் புர்த்தி செய்த 1வது Batch மாணவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!!!!

தொடர்புகளுக்கு

Prof. A. Sanmugadas,
Administrative Advisor.

NORTH LANKA I I T
The Srilankan Center of Trinity University USA
Main Street, Chankanai.
0773583616

NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction, Jaffna.
0212228148

"தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்"

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 07 - 1966

மறைவு 04 - 07 - 2006

அமரர் **கோபாலபிள்ளை விமலதாசன்**

(நில அளவைத் திணைக்களம், வவுனியா)

ஆண்டொன்று ஆனதுவோ
எங்கள் அருமை அப்பா
அகிலத்தை விட்டோடி
பாசப்பறவைகள் நாம்
பரிதவித்து பாசத்தால் ஏங்குகிறோம்
விண்ணுலகம் புகுந்தகாரணம் எமக்குப்
புரியவில்லையே
எங்கள் உயிர் உள்ளவரை
ஆறாது எம் துயரம் மாறாது உங்கள்
நினைவு எம் இதயத்தில்
எந்நாளும் உமை நினைத்தே
இவ்வுலகில் வாழ்கின்றோம்.

இந்துப்பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு.

அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர். (61873)

31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது வகுப்பாசிரியர் பு.ரூஸ்கந்தராஜா அவர்களின் அன்புத் தந்தை **அமரர் பண்டாரம் புவிராஜா** *அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

தரம் 10 மாணவர்கள்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(61884)

விசேட ஆங்கில வகுப்பு

30 நாள்களில் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்குரிய விசேட பயிற்சிக் கருத்தரங்கு பயிற்சி முடிவில் -

★ சரளமாக ஆங்கிலத்தில் பேசும் அறிவு
★ பண்புற்றியமைக்கான சான்றிதழ்
★ வேலை வாய்ப்பு(இணைப்பாளர்)

ஆரம்பம் - 25.06.2007
முற்பகல் 10 மணி(பிரிவு 1)
பிற்பகல் 03 மணி (பிரிவு 2)

மேலதிக விவரமறிய -

PMC

443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்

(61896)

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

பண்டாரம் புவிராஜா

நிஜமாக 08✱04✱1931

நினைவாக 24✱05✱2007

எங்கள் மனதை வாசித்து
எமக்கு ஏற்றதை யோசித்து
எங்களுக்கு ஏற்றத்தை யாசித்த - ஐயா
நீங்கள்...என்றென்றும் எமது இதய
மூலையில்...
உங்கள்...சிந்தனை நினைவுகளுடன்...

இல.03, பலாலி வீதி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

(61877)

தவறிவிட்டது

பழைய வீதி, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நாகலிங்கம் ரவேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (772663250V) அல்லைப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் பயணம் செய்தவேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: லிங்கள் ஸ்ரோர்ஸ், 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (61871)

கண்ணீர் அஞ்சலி

மாபெரும் ஆசான்

பண்டிதர் க.வேலுப்பிள்ளை *(க.வே.)*

(22.06.2007 கொழும்பில் இறைபதம்)

ஐயா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு மனம் வெதும்பி திக்குண்டோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: *2573* (ர/52738)

ஸ்ரீகுப்பிரமணிய புத்தகசாலை,
235, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: *9481*

25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

தங்கவேலாயுதம் கதிர்ராமு

மலர்வு 15-11-1943 | உதிர்வு 10-06-1981

ஆண்டுகள் இருபத்தைந்து சென்றாலும் ஆறாது எமது துயர்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

த.பாலபரமேஸ்வரி [அன்பு மனைவி -ஆஸ்திரேலியா],
மக்கள்: அனுஷா, பாலச்சந்திரன் (ஆஸ்திரேலியா),
திருமதி ஜெயப்பிரகாஷ் தீபா (ஆஸ்திரேலியா)
மருமகன் - ப.ஜெயப்பிரகாஷ் (ஆஸ்திரேலியா)
பேர்த்தி - திரிஷா (ஆஸ்திரேலியா)

Tel.0061397936775
20, Geard st, Dandenong,vic, 3175, Australia,
T.Balachandran, 20,Geard street, Dandenong,
Victoria - 3175, Australia,

(61866)

மரண அறிவித்தல்

கதிரிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சங்கரப்பிள்ளை 19.06.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் செல்லத்தின் அன்பு கணவரும் காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும் தங்கம்மா, வைரமுத்து ஆகியோரின் சகோதரரும் சாந்தகுணதேவி, சண்முகராசா, செல்வராணி, சிவகுமார், குமுதினி, கௌரி, மீரா, ஜெயக்குமார், யசோதா, உதயகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் தந்தையும் தேவராசா, தவம், குகதாசன், சுகந்தினி, வரதராசா, மனோகரன், நித்தியராஜா, சத்தியா, கரிகரன், தயாளினி ஆகியோரின் மாமனும் வாசன், சாமினி, யசோததை, தேவகி, கோபிகிருஷ்ணன், மீரா, கோமகள், கிருசாந்தி, கிருஜாலினி, டிலக்ஸன், ஷாரா, நிரோஜன், நிவேந்தன், அரவிந்தன், நிவேதா, பிருத்தா, மாதுசா, கம்ஸனா, லக்ஷனா, ஜாதவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மாயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆழங்குழாய், சண்டிலிப்பாய். (61888)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2007

யாழ்.மாவட்ட தனியார் பாதுகாப்பு உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் (வ/து)

★ காலம்: 24-06-2007 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30
★ இடம் : சங்கப்பணிமனை
★ தலைமை : திரு.இ.அரிகரன்

முழு உறுப்புரிமையைப் பெற்ற அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

க.சின்னத்தம்பி,
கௌரவ செயலாளர்.

215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ.பி.டி.பியின் சர்வதேசப் பிரதிநிதிகள் ஜெனிவாவில் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்23

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஜனநாயக மறுப்புக்கள், ஆள்கடத்தல்கள் மற்றும் படுகொலை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஈ.பி.டி.பி. அமைப்பின் சர்வதேச பிராந்தியங்களின் உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

சந்திப்புத் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

96ஆவது சர்வதேச தொழிலாளர்கள் குறித்த மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாக ஜெனிவா சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஈ.டி.பி.டி.பியின் சர்வதேச பிராந்தியங்களின் உறுப்பினர்கள் கடந்த 15ஆம் திகதி சந்தித்து விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது சுவிஸ், ஜேர்மன், பிரித்தானிய மற்றும் கனடா பிராந்தியங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். ஈ.டி.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, கட்சியின் பேச்சாளர் தவராசா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியுடன் ஜெனிவாவில் உள்ள ஐ.நா.அலுவலக நிரந்தர பிரதிநிதியாக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கலாநிதி தயான் ஜெயத்திலக்க மற்றும் அமைச்சர் அதாவுட செனவிரட்ண ஆகியோரும் கலந்து பேச்சுகளில் பங்குபற்றினர்.

மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட ஜனாதிபதியுடனான சந்திப்புகளின் போது ஈ.டி.பி.டி.பியின் சர்வதேச பிராந்தியங்களின் பிரதிநிதிகள், தமிழ்பேசும் மக்கள் முகங்கொடுத்துவரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசியிருந்தனர்.

இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து எடுத்து விளக்கியதுடன் அவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடினர்.

நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

* * *

யாழ்ப்பாணம், ஜூன்23

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை, திருமதி ராஜலக்ஷ்மி பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்வர். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்23

சண்டிலிப்பாய் குடும்ப முன்பள்ளியின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் அருட்தந்தை செபஸ்ரியன் அன்ரனியும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். (203)

* * *

வலி.தென்மேற்கு, ஜூன் 23

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்.மேரிஸ் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு எம். யோகரத்தினம் அடிகளார் கலந்து கொள்வார். (203-135)

வாசகர் திருமுகம்

விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்

17.06.2007ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் ''மனிதாபிமானம் செத்துக் கொண்டிருக்கிறது'' என்கின்ற தலையங்கத்தில் வெளியான வாசகர் மடல் சம்பந்தமாக-

துரதிஷ்டவசமான இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திடம் சுகாதாரத் திணைக்களத்தின் வருத்தத்தினைப் பகிர்ந்துகொள்கின்றேன். இச்சம்பவத்தில் தவறிழைத்த சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

மின்வெட்டை பிரதேச பாகுபாடின்றி அமுல்படுத்த முடியாதா?

கோப்பாய், கல்வியங்காடு பிரதேச மக்கள் ஆகிய நாங்கள் மின்வெட்டு அமுல் படுத்தப்படும் நாள்களும் நேரங்களும் தெரியாமல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். தற்போது தொடர்ந்து இரு நாள்கள் மாலை. 6.30 முதல் இரவு 9.30 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு அடுத்துவரும் ஒரு நாள் மட்டும் மின் வழங்கப்படுகின்றது. இச்செயற்பாட்டினால் தற்போது உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கும் நாங்கள் மிகவும் பாதிப்படைகின்றோம். மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நாள்களில் எம்மால் படிக்கமுடியாமலிருக்கிறது.

மின்வெட்டு அமுல் படுத்தும் நேரமும் காலமும் இடத்துக்கு இடம் மாறுபாடாக உள்ளன. பலாலி வீதியுடன் அமைந்த யாழ்.நகரப் பகுதியும் நல்லூர் கோவிலை அண்டிய பிரதேசங்களில் மின் வெட்டு அமுல்படுத்தப்படுவதில்லை. மேலும் சில பிரதேசங்களில் ஒன்று விட்ட ஒரு நாள் மாத்திரமே மின்வெட்டு அமுல்படுத்தப் படுகின்றது. கடந்த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறானது எமது பகுதியான கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு மாணவரின் படிக்கும் ஆற்றலைக் குறைக்கும் மின்வெட்டும் ஒரு காரணம். மின் வெட்டானது கல்வியைக் கவனம் செலுத்திப் படிக்கும் நேரங்களில் நடைமுறைப்படுத்துவதானால் உயர்தரப்புரீட்சையில் சிறந்த அடைவு மட்டத்தினை இப்பிரதேச மாண வர் பெறமுடியாமலே இருக்கும்.

அரச சேவை உயர் அதிகாரிகளும் செல்வாக்குள்ளவர்களும் வசிக்கும் பிரதேசங்களுக்கு சிறந்த முறையில் மின் வழங்கப்படுவதனால் இப்பிரச்சினையை உயர் அதிகாரிகள் எவரும் கவனத்தில் கொள்வதில்லையோ....!

யாழ்.மாவட்டத்தில் வெளியாகும் பத்திரிகை மூலம் மின்சாரசபையினால் வெளிப்படுத்தப்பட்ட ஒன்றுவிட்ட ஒரு நாள் மின்வெட்டு என்பது எமது பிரசேத்திற்கு இல்லையா? மின்சாரசபையினால் யாழ்.மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாவிடின் எல்லாப் பிரதேசங்களிற்கும் பாகுபாடின்றி மின்வெட்டை அமுல்படுத்துவதன் மூலமே இப்பிரச்சினையை வெளிக்கொணர்ந்து தீர்வுகாண முடியும் என நாம் நம்புகின்றோம்.

எஸ்.நுபன்
கல்வியங்காடு. (பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில்)

ஆசிய நாடுகள் கூட்டாக நடத்தும் அடுத்த உலகக் கிண்ண கிரிக்கெட்

2011ஆம் ஆண்டு நடக்கும் 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றிருக்கிறது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார் நியமிக்கப்பட்டுள்ளார். உள்ளூர் ரசிகர்களுக்கு போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்களை குறைந்த விலையில் விற்பனை செய்வது பொதுவான விசா வழங்குவது போன்ற தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன.



சரத் பவார்

இதன் மூலம் அந்தப் போட்டிகளை கூடுதலாக ரசிகர்கள் கண்டுகழிப்பதற்கு வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நான்கு ஆசிய நாடுகள் இணைந்து இந்தப் போட்டியை நடத்துவது மேலும் ஒரு சிறப்பாகக் கருதப்படுகின்றது.

இதில் இந்தியாவில் இறுதிப்போட்டி உட்பட 22 ஆட்டங்களும், பாகிஸ்தானில் 14 ஆட்டங்களும் இலங்கையில் 9ஆட்டங்களும், பங்களாதேஷில் 6 ஆட்டங்களும் நடைபெறவுள்ளன.

உலகக் கிண்ண ஏற்பாடுகளைத் தொடங்குவதற்காக 4 நாடுகளின் கிரிக்கெட் சபை நிர்வாகிகளும் கடந்த வாரம் பாகிஸ்தானின் புர்வார் நகரில் கூடி ஆராய்ந்துள்ளனர். இந்தப் போட்டிக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இந்தியாவின் சரத்பவாரும் தலைமை அமைப்பாளராக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நசிம் அஷ்ரப்பும் பொருளாளராக இலங்கையின் சுஜீவ ராஜபக்ஷவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவின் தலைமையகம் பாகிஸ்தானின் லாகூரில் அமையவுள்ளது.

பொத்தம்

போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களின் விலை அதிகரிப்பால் அதிக ரசிகர்கள் போட்டியை நேரடியாகக் கண்டு கழிப்பதில்லை. இதனால் கடந்த காலங்களில் சில போட்டிகள் களை இழந்து காணப்பட்டமை இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து அதிக ரசிகர்களை வரவழைக்க நுழைவுச்சீட்டு விலையைக் குறைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

இந்தப்போட்டியைக் காணவரும் நான்கு நாட்டு ரசிகர்களுக்கும் தனித் தனி யாக விசா வழங்காமல் நான்கு நாட்டிலும் போட்டியைப் பார்க்கும் வகையில் பொதுவான விசாவை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசுகளிடம் பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொத்தமுக்கு உயரிய விருது

இங்கிலாந்தின் மிக உயரிய விருதான 'நைட் ஹூட்' விருதுக்கு இயன் பொத்தம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் பொத்தம் இதுவரை 102 டெஸ்ட், 116 ஒரு நாள் போட்டிகளில் ஆடியுள்ளார். மிகச்சிறந்த சகலதுறை ஆட்டக்காரர். ஓய்வு பெற்ற பின்னர் இரத்த புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறார். இங்கிலாந்தின் உயரிய விருதாக கருதப்படும் 'நைட் ஹூட்' விருதுக்கு இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருடன் கால்பந்து நட்சத்திரம் பெக்காமும் பரிசீலிக்கப்பட்டார்.

எனினும் இவரை தேர்வு குழு நிராகரித்தது. பெக்காம் அமெரிக்க அணி ஒன்றுக்காக விளையாட இருப்பதே இதற்கு முக்கிய காரணம் என தெரிகிறது. இங்கிலாந்து முன்னாள் கால்பந்து அணி முகாமையாளர் பாபி ராப்சன் கூறுகையில்,பெக்காம் சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை.

நுழைவுச் சீட்டு விலை குறைக்கவும் பொது விசா வழங்கவும் முடிவு

மேலும் லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் உரிமை பெற்றுத் தந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தார். இவர் 3 முறை உலக கோப்பை தொடரில் பங்கேற்றுள்ள போதும் ஆனால் ஒரு முறை கூட இவரால் அணியை இறுதிபோட் டிக்கு கொண்டு செல்ல முடியவில்லை. அரசின் உயரிய விருதை பெற அவருக்கு தகுதியில்லை,'' என்றார்.

இலங்கை பயிற்சியாளராக பெய்ல்ஸ்

பெய்ல்ஸ்

இலங்கை அணியின் பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் டிரெவர் பெய்ல்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இரண்டு ஆண்டுகளுக்கு இப்பதவியில் நீடிப்பார். உலக கோப்பை தொடரையடுத்து இலங்கை அணியின் பயிற்சியாளர் பதவியை ரொம் மூடி ராஜினாமா செய்தார். இதையடுத்து இப்பதவிக்கு பொருத்தமானவரை தேர்வு செய்யும் பணியில் இலங்கை கிரிக்கெட் சபை மும்முரமாக ஈடுபட்டது. ஆஸ்திரேலியாவின் டெர்ரி ஒலிவர், டிரெவர் பெய்ல்ஸ் ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. மூன்றாவதாக முன்னாள் நியூசிலாந்து பயிற்சியாளர் ரிக்சனும் போட்டியில் இருந்தார். இறுதியில் டிரெவர் பெய்ல்ஸ் பயிற்சி யாளராக நியமிக்கப்பட்டார். சிறந்த நடுவரிசைத் துடுப்பாட்ட வீரரான இவர் 1985 முதல் 1993 வரை நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக 58 முதல்தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

மே.இ. தீவுகள் அணியில் விவியன் ரிச்சர்ட்ஸ் மகன்

முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்ஸின் மகன் [illegible] தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து 'ஏ' அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்துக்கு தற்காலிகமாக அவர் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அணிக்குத் தெரிவு பெற்றிருந்த பந்துவீச்சாளர்களில் சிலர் காயத்தால் அவதியுற்று வருவதால் மாலியுடன் மேலும் இருவரையும் அணியில் சேர மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

23 வயதாகும் மாலி, தந்தையைப் போன்று வலது கை ஆட்டக்காரர் இல்லை. இடது கை நடுவரிசை ஆட்டக்காரரான அவர் வேகப்பந்துவீச்சாளரும் கூட.

15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஆன்டிகுவா அணிக்கு எதிராக சதம் அடித்துள்ளார். ஒருங்கிணைந்த விர்ஜின் தீவுகளுக்கு எதிராக 319 ரன்களைக் குவித்துள்ளார்.

குளோசெஸ்டர்ஷையர்,செக்ண்ட் லெவன் மற்றும் ஒக்ஸ்போட் யு.சி.சி.இ. அணிகளுக்கானவும் விளையாடியுள்ளார் மாலி.

டெஸ்டிலும் இவர் இன்சமாம் இல்லை!

ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற இன்சமாம் டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பது கடினமாக இருக்கிறது. பாகிஸ்தான் வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தில் இவரது பெயர் பரிசீலனைக்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. உலக கோப்பை தோல்வியை அடுத்து பாகிஸ்தானின் இன்சமாம் ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். டெஸ்டில் தொடர்ந்து விளையாட விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவரை கண்டுகொள்வதாக தெரியவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான் தேர்வுக் குழு வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தை கிரிக்கெட் சபை முன் சமர்ப்பித்துள்ளது. இதில் 33 வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களில் 20 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பாகிஸ்தான் அணிக்கான ஓராண்டு ஒப்பந்தம் அளிக்கப்படும். 33 பேர் கொண்ட இப்பட்டியலில் இன்சமாம் பெயர் இடம்பெறவில்லை. இதனால் அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

மைக்கல் வோகன் விலகினார்

இலங்கிலாந்து அணியின் ஒருநாள் போட்டிகளுக்கான அணித் தலைவர் பதவியிலிருந்து விலகினார் மைக்கல் வோகன். சிறந்த அணித்தலைவராக செயல்பட்ட இவர், 35 டெஸ்ட் போட்டிகளில் 21 வெற்றியும், 60 ஒரு நாள் போட்டிகளில் 32 வெற்றியும் பெற்றுக் கொடுத்துள்ளார்.



வோகன்

இந்நிலையில் அணியின் ஒரு நாள் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக மைக்கேல் வோகன் நேற்று அறிவித்தார். இது குறித்து பேட்டி அளித்த வோகன் கூறுகையில்,'' இந்த முடிவை சில நாள்களுக்கு முன்பே எடுத்து விட்டேன். இனி ஒரு வீரராக ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவேன்''. - என்றார்.

இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவராக செயலாற்ற விரும்புவதாகக் போல் கொலிங்வூட் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,'' டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளுக்கு வெவ்வேறு தலைவர் இருப்பது ஒன்றும் புதிதல்ல. ஆஸ்திரேலிய டெஸ்ட் அணிக்கு ஸ்டீவ் வோவும், ஒரு நாள் அணிக்கு ரிக்கி பொண்டிங்கும் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் பொறுப்பேற்க விரும்புகிறேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் சிறப்பாக செயல்படுவேன்,'' என்றார்.

டிலான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின்
அனுசரணையுடன்
இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும்

மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2007
இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம் :- ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானம்
காலம் :- நாளை (24-06-2007) பிற்பகல் 2.30
தலைமை :- திரு.கி.தங்கவடிவேல் J.P.
(தலைவர், ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்)
பிரதம விருந்தினர் :- வைத்திய கலாநிதி
வை.தியாகராஜா J.P.
இறுதிப்போட்டி :-
1. ஸ்ரீ முருகன் (இருபாலை) *எதிர்* விக்னேஸ்வரா (அச்சுவேலி)
2. இந்து இளைஞர் (ஆவரங்கால்) *எதிர்* மத்தி (ஆவரங்கால்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம்.
அனுசரணை : - **மு.சுஜிஸ்கரன்**
(இருபாலை). (கி/52734)

புதிய அங்கத்தவர்கள் தெரிவுக் கூட்டம்

சுன்னாகம் அரிமா கழகத்தின் 2007/2008 ஆண்டிற்கான புதிய தலைவர்/அங்கத்தவர்கள் தெரிவுக்கூட்டம் தலைவர் லயன் ந.சண்முகவேல் (J.P.) அவர்களின் தலைமையில் நாளை (24.06.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கந்தரோடையில் லயன் மகாதேவா (J.P.) (புதிய தலைவர்) அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.
(ஸ்கந்தவரோதயா கல்லூரி முன் வீதியில்)
ந.சண்முகவேல் (J.P.)
தலைவர்
(61934)

இரு புதிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் மிகமலிவான விலையில் உயர்தர சேவையுடன் வாடகைக்கு விடப்படும். (48465) (24)
தொடர்புகளுக்கு
சோமசுந்தரம் படசாலை
22, சோமசுந்தரம் அவெனியூ, கல்லடி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



மேற்கு அல்வாய் 'மலர் மஹாலைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
இளையதம்பி இராசையா
தோற்றம் 28-10-1935 மறைவு 24-05-2007
அன்பின் இருப்பிடமாய் வாழ்ந்து எம்மை எல்லாம் நல்வழி நடத்திய அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு என்றும் நினைவாக எம் உள்ளங்களில் வீற்றிருக்கும்!

கடந்த 24.05.2007 அன்று சிவபதமடைந்த எமது தந்தையாரின் துயரத்தில் பங்குபற்றியும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் தொலைபேசி மூலம் அனுதாபத்தை பகிர்ந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (23.06.2007) சனிக் கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.47 நொத்தாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
திரு. திருமதி தமிழ்அரசன் ரேவதி
(லண்டன்).
(கி/52721)

சரிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **செந்தாமரைச்செல்வி தவராஜசேகரன்**
மலர்வு 16-07-1967 உதிர்வு 11-05-2007

கடந்த 11.05.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியைக் கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வகைகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை (24-06-2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நவலி: தவராஜசேகரன்
குடும்பத்தினர்.
நவாலி தெற்கு. (61853)

Organ/ Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்பு அடங்கும் Organ, வயலின், Guitar, மிருதங்கம் ஆகிய வகுப்புகளும் விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.
கரவீணா இசைமன்றம்,
75, கோவில் வீதி, நல்லூர்.
T.P.: 0713055991, 0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)
(61421)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

aat (SriLanka)
Foundation level, Intermediate level & Final
Medium - Tamil & English Exam:-June 2007
Minimum Requirement : G.C.E.O/L
5 Passes or GCE A/L 2 Passes
விரிவுரைகள் ஆரம்பம்: 23.06.2007 Medium : English & Tamil

Further Details
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
(Near Commercial Bank),
Jaffna.
(கி/52718)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி சோமசுந்தரம் அவனியுவில் புனித பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய சிறு காணியும் வீடும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு :
0112512800, 0777563781.
சுண்டுக்குளி. (61861)

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு

தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(61992)

கோழிகள் விற்பனைக்கு

ஊர்க்கோழிகள் மற்றும் கல்பேட் விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
தாசன் பாம்
இல. 158/4, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(61862)

புறொயிலர் உயிர்க்கோழி

புறொயிலர் உயிர் இறைச்சிக்கோழி, கல்பேட் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்)
NEW R.S.K FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்
(61774)

விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி (ஜஸ்) வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
(61868)

இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் கோழி உடன் தேவை
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.
(61869)

புதிய கலை நிறுவனத்துடன் ...!

COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கருகைநெறிகள்

Jaffna Head office: No 15 Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 25/06/2007 - 9.00 AM

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

3Months Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB

Course Contents
❖ Manual Accounting
❖ Financial Accounting
❖ Cost Accounting
❖ Taxation (Including VAT)
❖ Stock Control
❖ Bank Reconciliation
❖ Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 23/06/2007
Batch II : 24/06/2007
BatchIII : 25/06/2007
Batch IV: 28/06/2007

24ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 16 04 1946 உதிர்வு 23 06 1983

திருமதி சிவராஜா இராஜேஸ்வரி
(மண்டைதீவு)
அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இதயத்தில் கலந்த அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
61/25, மில்லேன்,
பிரம்படி கொக்குவில்.
குடும்பத்தினர்.
(61961)

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 50% off

Diploma in Computer Science 4 Months ~~2,000~~ 1,400	Honours Diploma in Computer Science 5 Months ~~2,000~~ 1,800	Diploma in Web page Designing 4 Months ~~2,000~~ 1,400
Diploma in Graphic Desining 4 Months ~~2,000~~ 1,400	Diploma in Desktop Publishing 4 Months ~~2,000~~ 1,200	Diploma in Hardware Engineering 3 Months ~~2,000~~ 1,200
Diploma in Auto CAD 3 Months ~~2,000~~ 1,200	Diploma in Microsoft Office 3 Months 750	Accounting Package 3 Months ~~2,000~~ 1,400

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5000~~ 2,500
Diploma in Video Editing ~~6000~~ 3000

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 27/06/2007
Batch II : 29/06/2007
Batch III : 30/06/2007
Batch IV : 06/07/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சகல [illegible] அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். [illegible] பயிற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

மங்கள சமரவீர அணிக்கு காலம் பிந்திப் பிறந்த ஞானம்

காலம் பிந்திப் பிறக்கும் ஞானம் குறித்து விளக்குவதற்கு தமிழில் நல்ல பழமொழிகள் உண்டு. 'கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்', 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது' என்று பல உள்ளன.

முன்னாள் அமைச்சரும் தற்போது 'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவு' என்ற கட்சியை உருவாக்கியவருமான மங்கள சமரவீர தற்சமயம் கூறும் கருத்துக்களைக் கவனத்தில் எடுக்கும்போது இந்தப் பழமொழிகள்தான் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

மங்கள சமரவீர தற்போதைய அரசையும், அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் மிக மோசமாக விமர்சித்திருக்கின்றார்.

தமது அரசியல் வாழ்க்கையில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைப் போல ஒரு மோசமான அரசைத் தாம் இதற்கு முன் ஒருபோதும் கண்டதில்லை என்று அந்த மூத்த அரசியல்வாதி விமர்சித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் கவனிக்கத் தக்கவை.

ஒன்று - ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்குத் தாம் உழைத்தமைக்காக அவர் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரியிருக்கின்றார்.

மற்றது -''உண்மையைக் கூறப்போனால் மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்குக் கிடைத்த நல்ல ஜனாதிபதி. புலிகள் தங்களின் செயற்பாட்டை விஸ்தரித்துச் செல்ல மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தான் சரியானது, பொருத்தமானது.'' - என்ற அவரது கூற்று.

இந்த இரண்டு கருத்துரைகளுமே காலம் பிந்தி அவருக்குப் பிறந்த ஞானத்தின் வெளிப்பாடுகள்தாம்.

தமிழரின் தேசிய தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, அவர்களுக்கு நியாயமாக உரியதை விட்டுக்கொடுத்து, அவர்களை அரவணைத்துச் செல்ல சிங்கள தேசம் எப்போதுமே மறுத்தே வந்திருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தமிழ் மக்கள் தலைப்பட்டனர். சுமார் ஆறு தசாப்த காலமாக அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு, வேண்டத்தகாத இனமாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறந்தள்ளி வைக்கப்பட்ட தமிழ் இனம், சிங்கள ஆட்சியமைப்பையும் அதன் அதிகார பீடத்தையும் அடியோடு புறக்கணித்து ஒதுக்கத் தலைப்பட்டது.

தமிழர் தாயகப் பிரதேசம் கடந்த ஜனாதிபதித் தேர்தலை புறம் ஒதுக்கிப் பகிஷ்கரித்ததன் பின்புலம் இதுதான்.

தென்னிலங்கையின் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் வாக்குப்பலம் தமிழர்களிடமே இருந்தது. இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் அவர்களிடமே இருந்தது. ஆனால் அந்த வாய்ப்பைத் தமிழர்கள் பயன்படுத்தவில்லை. சிங்களம் தன்னுடைய தலைமையைத் தானே தேர்ந்தெடுக்க இடமளித்துத் தமிழ்த் தேசம் ஒதுங்கி நின்றது.

இந்தத் தேர்தல் பகிஷ்கரிப்பை முன்னின்று முன்னெடுத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்தாம். அதற்காக இந்த நடவடிக்கையை அத் தேர்தலில் போட்டியிட்ட இரு முக்கிய சிங்களத் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கு இருந்த தனிப்பட்ட விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் புரிந்துகொள்ள முயல்வதோ அல்லது வியாக்கியானம் செய்வதோ தவறானது.

ஒட்டுமொத்த சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஆழமான விரக்தியினதும், பெரும் நம்பிக்கையீனத்தினதும் வெளிப்பாடாகவே இதனைக் கருதவேண்டும்; நோக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வென்று சரியாக பத்து நாள்கள் கடந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தாம் ஆற்றிய வருடாந்த மாவீரர் தின உரையில் மஹிந்த ராஜபக்ஷவின் தெரிவு எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை தெட்டத் தெளிவாக மதிப்பீடு செய்து பகிரங்கப்படுத்தியிருந்தார்.

''சிங்களத் தேசமானது ஒரு புதிய தேசத் தலைவனைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது. அந்தத் தலைவனின் கீழ் ஒரு புதிய ஆட்சிபீடம் பதவி ஏறியுள்ளது. இந்த ஆட்சியமைப்பானது பிரத்தியேகமாகச் சிங்களப் பெரும்பான்மை மக்களால், அவர்களது வாக்குப்பலத்தால் நிறுவப்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சியமைப்பில் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பங்களிப்பு இருக்கவில்லை. இது முற்றுமுழுதாகவே ஒரு சிங்கள - பௌத்த ஆட்சி பீடமாகும். இதனால் மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வாழ் மக்கள் சமூகங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

அவர் சிங்கள- பௌத்த மக்களின் நலனைப் பேணும் அரச அதிபராகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரச அதிபர் மஹிந்தவின் சிந்தனைகளையும், கொள்கைகளையும் நாம் நன்கறிவோம்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தீர்வுசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும், இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம்.''

- இப்படித் தெரிவித்திருந்தார் தலைவர் பிரபாகரன்.

சிங்கள - பௌத்த மக்களின் நலனைப் பேணும் ஒரே நோக்கில் தெரிவுசெய்யப்பட்டவர் அதற்காகவே செயலாற்றுகின்றார். அதன் மூலம் தெரிந்தோ, தெரியாமலோ - விரும்பியோ, விரும்பாமலோ - தமிழர் தேசத்தின் தனித்துவமான உரிமைப் போராட்டத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துபவராகவும் விளங்குகின்றார் அவர்.

இந்த நியாயம் - இந்த உண்மை - மூத்த அரசியல்வாதியான மங்கள சமரவீரவுக்கு விளங்குவதற்கு இவ்வளவு காலம் எடுத்தது என்பது துரதிஷ்டம்தான்.

இப்போதுதான் அதைப் புரிந்துகொண்டு பிலாக்கணம் பாடுகிறார் அவர். அவ்வளவே.

நாடாளுமன்றம் அமரும் நாள்களில் உறுப்பினர்கள் பொலீஸாரால் விசாரணைக்கு அழைக்கப்படமாட்டார்கள்

சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்23

நாடாளுமன்ற அமர்வில் இருக்கும் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரகசிய புலனாய்வு பொலீஸாராலோ பயங்கரவாதத் தடுப்பு பிரிபுப் பொலீஸாராலோ விசாரணை களுக்கு அழைக்கப்படமாட்டார்கள். இந்த உத்தரவாதத்தை பொலீஸ்மா அதிபர் வழங்கியிருக்கிறார்.

சபாநாயகர் டபிள்யு. ஜே. எம் லொக்குபண்டார நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

நாடாளுமன்ற அமர்வில் இருக்கும் நாளில் அதில் கலந்துகொள்ள முடியாத விதத்தில் தம்மை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுபொறுப்பதிகாரி அழைப்பு விடுத்திருப்பதாகவும் அது தமது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலான சிறப்புரிமைகளை மீறும் செயலாகும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா நாடாளுமன்ற டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்திருந்தார். இம்மாதிரியான பொலீஸாரின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து பொலீஸ்மா அதிபருடன் ஆலோசனை நடத்தியதன் பின்னர் மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் அமர்வில் இருக்கும் நாள்களில் தாம் பொலீஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக சிறிபதி சூரியாராச்சி மற்றும் டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆகியோர் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும் முறைப்பாடு செய்திருந்தார்கள். இதுகுறித்து பொலீஸ்மா அதிபர் விக்டர் பெரெரா தமது வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார் என்று சபாநாயகர் லொக்குபண்டார தெரிவித்தார். நாடாளுன்றம் அமர்வில் இருக்கும் நாள்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் இரகசியப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸ் பிரிவினருக்கும் சுற்றுநிருபங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பொலீஸ்மா அதிபர் உறுதியளித்திருப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயங்கர வாதத் தடுப்புப் பொலீஸாரின் விசாரணைகளின்போது அவரது சட்டத் தரணி ஒருவர் பிரசன்னமாக இருப்பதற்கான அவரது உரிமையை சபை அங்கீகரிக்கிறது என்றும் தெரிவித்தார்.(அ-ப)

முடி அலங்கரிப்பு மோகத்தினால் ஆஸ்பத்திரியில் இளைஞர்

கொழும்பு, ஜூன் 23

கிரிக்கட் வீரர் லசிந்த மலிங்கா வின் தலை முடியின் பாணியில் தனது தலை முடியையும் அலங்கரித்துக் கொள்ள ஆவல் கொண்ட 20 வயது இளைஞர் ஒருவர் கடும் இரசாயன எரி காயங்களுக்குள்ளான நிலையில் கண்டி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிரபல கிரிக்கட் வீரர் லசிந்த மலிங்கவின் பாணியில் தமது தலை முடியையும் அமைத்துக்கொள்ள விரும்பிய இந்த வாலிபர் இரு வெவ்வேறு இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளார் என்றும் அதனால் எரி காயங்களுக்குள்ளானார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

இந்திய பாதுகாப்பு ஆலோசகரை உடன் பதவி விலக்கவேண்டும்

திராவிடர் கழகப் பொதுக்குழு தீர்மானம்

இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனை உடனே அப்பொறுப்பிலிருந்து மாற்ற வேண்டும் என்று திராவிடர் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ் நாட்டில் ஆளும் தி.மு.க.வின் முக்கிய கூட்டுக் கட்சியாக திராவிடர் கழகம் இருப்பதால் எம்.கே. நாராணயணன் விரைவில் மாற்றப்படக் கூடும் எனவும் கூறப்படுகிறது.

சென்னை திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அந்த இயக்கத்தின் பொதுக் குழுவில் இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

ஈழத் தமிழர்களை முற்றாக ஒழிப்பதற்கு சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து போர் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது சிங்கள அரசு.

மேலும் போதாதற்கு இந்தியாவும் தன் பங்குக்கு சிறிலங்காவுக்கு ஆயுதங்களை தந்து உதவுகிறது. கேட்டால் தற்காப்பு ஆயுதங்களைத் தான் வழங்குவதாகக் கூறுகிறார்கள்.

ஈழத் தமிழர்களைக் கொன்று ஒழிப்பதற்காகவே செயற்படும் ஓர் அரசுக்கு தற்காப்பு ஆயுதங்கள் வழங்குவது கூட ஒரு வகையில் அந்நாட்டு அரசுக்கு உதவி புரிவதாகவே கருதப்படவேண்டும்.

ரடார் போன்ற கருவிகளை இந்தியா வழங்குவது சிறிலங்காவின் தமிழினப் படுகொலைக்கு ஆக்கம் தருவதல்லாமல் வேறு எதுவாக இருக்கமுடியும்?

இவையெல்லாம் சிறிலங்கா அரசின் தற்காப்புக்காகவா அல்லது தமிழர்களைப் பூண்டோடு அழிக்கவா என்பதைக் கடுகளவு சிந்திப்பவர்களாலும் புரிந்துகொள்ள முடியும்.

இந்தியாவில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருக்கக்கூடிய எம்.கே. நாராயணன் என்பவர் இந்தப் பொறுப்பிலிருந்து உடனடியாக மாற்றப்பட வேண்டும். சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக அவருடைய நடவடிக்கைகள் இல்லை என்பதையும் இப்பொதுக்குழு சுட்டிக் காட்டுகிறது - என்றுள்ளது.

(50)

நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்க 40ஆவது ஆண்டு விழா

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் வி. மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்துகொள்வார்.

தமிழர்கள் கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட்டமை

அடிப்படை உரிமைமீறல் வழக்குக்கு முஸ்லிம் வர்த்தகர் எதிர் மனுத் தாக்கல்

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவிற்கு எதிராக கொழும்பு முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் எதிர் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவுக்கு எதிராக இடையில் குறுக்கிடும் மனுதாரராக தம்மை இந்த வழக்கில் அனுமதிக்குமாறு டாக்டர் மொகம்மது சுலைமான் சுர்பிக் என்பவர் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தையும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் டாக்டர் பாக்கியசோதி சரவண முத்துவையும் அவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களை சரியான காரணமின்றி வெளியேற்றுவதற்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்தமை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தலைநகரைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாகும். இதனை மேற்குலக ஊடகங்கள் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாகத் திரிபு படுத்தி கூறியுள்ளன என்று அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வாழ்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமாவர். சிறுபான்மையானவர்கள் சிங்களவர்களே. பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் மீது கொழும்பு விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் 300 அல்லது 400 பேர்கள் மட்டுமே. கொழும்பில் வாழும் பெருமளவு தமிழர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது சிறு எண்ணிக்கையே. கொழும்பு நகர் பலதடவைகள் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. நகரில் வாழும் மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருந்து வருகின்றது.

விடுதிகளில் வாழ்ந்த தமிழர்களை அப்புறப்படுத்துவதற்கு மாறான நீதிமன்ற தீர்ப்பு, இராணுவம் பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை பாதிப்பதாகும் என்று மனுதாரர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ப)

நாளை

ஆனி - 10	ஞாயிற்றுக்கிழமை 24.06.2007
திதி : நவமி	மு.ப. 11.40
நட்சத்திரம் :	சித்தம் முழுவதும்
சுபநேரம்	: 0855 - 10.25
ராகுகாலம்	: 04.25 - 05.55

யாழ். மாநகரசபைப் பகுதியில் குழாய் நீருக்கு பணம் அறவிடப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாநகரசபையின் குடி தண்ணீர் விநியோகத்திற்கான பராமரிப்புச் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டு, பாவனையாளர் சங்கங்கள் உருவாக்கப்படவுள்ளன. அவற்றின் ஊடாக குழாய் நீருக்குப் பணம் அறவிடப்பட உள்ளது. இத்தகவலை யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாநகர சபையின் குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் பராமரிப்புச் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இச் செலவை ஈடுசெய்யும் பொருட்டு மக்களின் பங்களிப்புடன் விநியோகம் மேம்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய பொது நீர்க்கம்பங்களின் ஊடாக குடி தண்ணீரை (குழாய் நீர்) பெறுபவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட பாவனையாளர் சங்கங்கள் நிறுவப்பட உள்ளன.

அச்சங்கங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் குழாய் நீர் மூலம் நீரைப் பெறுகின்ற ஒரு குடும்பத்துக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபா வீதம் மாதாந்தம் 30 ரூபா சேகரிக்கப்படவுள்ளது. இந்நிதி ஒவ்வொரு சங்கங்களினதும் கண்காணிப்பான கணக்கு மாநகரசபையில் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவித்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரற்ற காலநிலை காரணமாக 6 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற காலநிலை அனர்த்தத்தில் சிக்கி நேற்றுவரை ஆறுபேர் உயிரிழந்தனர். சுமார் 50 பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பகல் வீசிய கடும் காற்றினால் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது நுவரெலியாப் பிரதேசத்தில் மூவரும் இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் மூவரும் உயிரிழந்துள்ளனர்.

நுவரெலியாவில் இந்துல தோட்டப் பகுதியில் லயன் அறைகள் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் சில லயன் அறைகள் சேதமடைந்தன. ஆறுபேர் காயமடைந்துள்ளதுடன் 36 பேர் குடிபெயர்ந்துள்ளனர்.

ரத்தோட்ட குனுகொலப்பிரதேசத்தில் வீசிய காற்றினால் பத்து லயன் அறைகள் சேதமடைந்தன. இங்கிருந்த பத்துக்குடும்பங்கள் குடிபெயர்ந்து சென்று அருகில் உள்ள பாடசாலையில் தங்கியுள்ளன.

இரத்தினபுரி ஒப்பநாயக்கப் பிரதேசத்தில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் பல பிரதேசங்களில் வீசிய கடும் காற்றினால் 67 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வீசிய பலத்த காற்றினால் மொறட்டுவ கரையோரத்தில் பலவீடுகள் சேதமடைந்துள்ளன. (சி)

முஸ்லிம் வர்த்தகர்கள் அச்சம் காரணமாக மலேசியா செல்வதில் பெரும் ஆர்வம்

கொழும்பு, ஜூன் 23

கொழும்பில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் பலர் அச்சம் காரணமாக மலேசியாவுக்குச் செல்ல இருக்கின்றனர்.

இதுவரை 70 முஸ்லிம் வர்த்தகர்கள் மலேசியாவுக்குச் செல்ல விண்ணப்பித்துள்ளனர்.

மலேசியா செல்ல வசதியாக கொழும்பு வங்கிகளில் இருந்த தமது கணக்குகளை அவர்கள் மூடி வருகின்றனர்.

65 லட்சம் ரூபாவுக்கு அதிகமான நிதியை கொண்டு செல்பவர்களுக்கு மலேசியாவில் 60 வீதக் கடன் வழங்கப்படும் என்று இருவாகனங்களை தீர்வையின்றி இறக்குமதி செய்யலாம் என்றும் இந்தச் சலுகைகளை முஸ்லிம் வர்த்தகர்கள் பெறலாம் என மலேசிய அரசு அறிவித்துள்ளது. (அ-1)

காணாமற்போன 3 இளைஞர்கள் வவுனியாவில் சடலங்களாக மீட்பு

வவுனியா, ஜூன் 23

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை இளைஞர்கள் மூவரது சடலங்களைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர். சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் 25 தொடக்கம் 27 வரையிலான வயதுக்குட்பட்டவர்கள் என்று கூறப்படுகின்றது. எனினும் சடலங்கள் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.

கடந்த இரண்டு, மூன்று நாள்களுக்கு முன்பு காணாமற்போயிருந்தவர்களே இவர்கள் என்றும், சடலங்களில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

தமிழர் வெளியேற்றம்.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை உயர் நீதிமன்றத்தில் வேறு மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம் பிறப்பித் திருந்தது.

எனவே, இந்த மனுக்கள் முன்பு தடையுத்தரவை வழங்கிய நீதியரசர்களின் ஆயத்தின் முன்னர் எடுக்குமாறு நீதிமன்றம் பணித்தது.

இதேவேளை, இந்த விவகாரத்தில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டதை நியாயப்படுத்தி தம்மை எதிர் மனுதாரர்களாகக் கூறி கலாநிதி மொகமட் கௌசல், முகமட் சுலைமான்சுர்பிக் ஆகியோரது மனுக்களும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட் டன. இதனையும் முன்னைய ஆயத்தின் முன்னர் எடுக்குமாறு நீதிமன்றம் உத் தரவிட்டது. (மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

குடுமிமலையில் 15 சடலங்கள் மீட்பு என்கின்றது இராணுவம்

கொழும்பு, ஜூன் 23

குடுமிமலை (தொப்பிகல) பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இங்கு விடுதலைப் புலிகளின் மூன்று முகாம்களைக் கைப்பற்றியிருப்பதாக இராணுவம் கூறுகிறது. இந்தப் பகுதியிலே 15 பேரின் சடலங்களும் சுமார் நூறு நிலக்கண்ணி வெடிகளும் மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால் குடுமிமலையில் தாங்கள் தங்களது எந்த முகாமையும் பறிகொடுக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் கூறியிருக்கின்றனர். (சி)

ஊடகவியலாள .....

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஊடக நிறுவனம், எல்லை கடந்த செய்தியாளர் அமைப்பு, தெற்காசிய ஊடக ஆணைக்குழு ஆகியவை உட்பட முன்னணி ஊடக அமைப்புகளின் குழு ஒன்று மேற்கொண்ட கூட்டு ஆய்வுக் குப் பின்னர் அறிக்கை ஒன்றை அவை கட்டாக வெளியிட்டுள்ளன..

அந்தஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டிருப்பதவது:-

''ஊடகவியலாளர் மீது சமீப மாதங்களாக, பல்வேறு வகையான அழுத்தங்கள் கொடுக்கப்பட் டுள்ளன. இதனால்குறிப்பாக, யுத்தம் நிகழும்வடக்கிலும், கிழக்கிலும் செய்திச் சேவையாற் றும் ஊடகவியலாளர்கள்பெரிதும்பாதிப் க்குள்ளாகியுள் ளனர்.

''தமது பாதுகாப்புத் தொடர்பான அச்சம் வெகுவாக அதிகரித்துள்ளது டசின் கணக்கான ஊடகவியலாளர், யாழ். குடாநாட்டில், தம் பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தால், தம் சேவையைக்கைவிட்டுள்ளார்கள். கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

''2006ஆம் ஆண்டு ஒக்டோபரில் அதிகாரிகள் இந்த சர்வதேச நிறுவனத்துக்கு பரிந்துரைகள் செய்துள்ளார்கள். எனினும், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் ஆகியவை தொடர்பான வழக்குகளின் விசாரணைகளில், முன்னேற்றம் பெரிதும் ஏற்படவில்லை.

எவரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை

''எங்களின் பதிவுகளின்படி, தற்போதைய ஜனாதிபதி பதவியேற்றதுமுதல் இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக, எந்தவொரு சந்தேகநபரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

''ஊடகத்துறைக்கு எதிராக வார்த்தைகள் மூலமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படித் தாக்குதல் நடத்தியவர்களில் அரசாங்க அமைச்சர்களும் அடங்குவர். இந்த நிலைப்பாடு, ஊடகவியலாளர்களினதும் அவர்தம் குடும்பங்களினதும் பாதுகாப்புக்கு ஆபத்தாக உள்ளது.

''தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், பேச்சுச் சுதந்திரமும் நடமாட்டத்துக்கான சுதந்திரமும் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

''ஊடகவியலாளர் கொல்லப்பட்டுள்ளனர்; கைது செய்யப்பட்டுள்ளனர்; தாக்கப்பட்டுள்ளனர்; கடத்தப்பட்டுள்ளனர். துரோகிகள் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஊடக சுதந்திர மீறல்கள் கட்டவிழ்த்துவிடும் 3 தரப்புகள்

இத்தகைய ஊடக சுதந்திர மீறல்களைக் கட்டவிழ்த்து விடுவதாக, தமிழீழ விடுதலைப் புலிகள், பாதுகாப்புப் படைகள், துணைப்படைக் குழுக்கள் ஆகியவை மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சமீப வன்முறைகள் ஏப்ரலில் இடம்பெற்றுள்ளன. 'நிஜம்' என்ற மாதச் சஞ்சிகையைச் சேர்ந்த சுபாஷ் சந்திரபோஸ், தமிழ் 'உதயன்' செய்திப் பத்திரிகையைச் சேர்ந்த செல்வராஜா ரஜிவர்மன் ஆகியோர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களோடு 2005ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதல் 11 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுதவிர மற்றுமொரு ஊடகவியலாளர் கடத்தப்பட்டுள்ளார். இன்னும் மர்மம் துலங்கவில்லை.

அவமானப்படுத்துவதன் மூலமோ, வசைபாடுவதன் மூலமோ அரச உறுப்பினர்கள், ஊடகவியலாளரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கிறார்கள். ஊடகத்துறையை 'வெறி' கொண்டது என சுகாதார அமைச்சர் சாடியுள்ளார். இதர அமைச்சர்களும் பாதுகாப்புச் செயலாளரும் ஊடகவியலாளரைப் பகிரங்கமாக மிரட்டியுள்ளார்கள். அவமானப்படுத்தியுள்ளார்கள்.

சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தைப் பாதிக்கும்

ஊடகத்துறை மீது அதிகரித்துவரும் அதிகாரிகளின் விரோத உணர்வும், அதிருப்தி கொண்டதனிப்பட்ட அமைச்சர்கள் மேற்கொள்ளும் வார்த்தைகளாலான தாக்குதல்களும், சுயதணிக்கையை ஊக்குவிக்கின்றன. இது இலங்கையில் சுதந்திரத் தகவல்கள் பரிமாற்றத்தைப் பாதிக்கக் கூடியவை.

ஓர் ஊடகவியலாளர் நீதிமன்றத்தால் தாம் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர், 90க்கும் மேற்பட்ட நாட்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாண நகரில் வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்றுக்கான அச்சிடும் தாள்கள், மை ஆகியவற்றை அரசு கட்டுப்படுத்தியுள்ளது. குடாநாட்டுக்கான போக்குவரத்துக் கட்டுப்பாடே இதற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. சமீபத்தில் முன்னணி தமிழ் தகவல் இணையமான 'தமிழ் நெற். கொம்' இலங்கை இன்ரநெற் சேவை வழங்குநர்களால் தடை செய்யப்பட்டுள்ளது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச நிறுவன ஜனாதிபதிக்கும் அரசுக்கும் பின்வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளது

★ சுபாஷ் சந்திரபோஷ், செல்வராஜா ரஜிவர்மன் ஆகியோர் கொலைகள் உட்பட ஊடகவியலாளர் கொலைகள், ஊடகவியலாளருக்கும் அவர்தம் குடும்பங்களுக்குமெதிரான கொலை மிரட்டல்கள் ஆகியவை தொடர்பாக, உரியகால விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

★ யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரின் பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். 11 கொலைகளில் 10 கொலைகள் இப்பகுதியிலேயே நடைபெற்றுள்ளன.

★ மிரட்டல்கள், தொல்லைகள், கடத்தல்கள், ஊடகவியலாளருக்கு எதிரான தாக்குதல்கள் ஆகியவை நிறுத்தப்படவேண்டும். (அ-சி)

உலகில் பத்திரிகை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

''உலகிலேயே பத்திரிகையாளர்களுக்கு மிக மோசமான ஆபத்துநிறைந்த இடம் யாழ்ப்பாணம்தான். அதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை மிகக் கொடூர நெருக்கடி களை எதிர்கொண்ட நிலையில் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அந்த நிறுவனத்தின் ஊடகவியலாளர்களில் 90 வீதமானோர் தமது பணியிலிருந்து பாதுகாப்புக் கருதி ஒதுங்கிக் கொண்டுவிட்டனர். இரு பிரதான ஊடகவியலாளர்கள் மட்டுமே அந்தப் பத்திரிகையை இயக்கிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியே வரமுடியாத நிலை.

'உதயன்' மீது பல தாக்குதல்கள் நடந்துவிட் டன.ஆனால்அவைகுறித்துகாத்திரமான விசாரணை ஏதும் நடக்கவில்லை. யார்மீதும் நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லை.

- இவ்வாறு மேற்படி குழுவின் பிரதிநிதிகள் நேற்றைய செய்தியாளர்மாநாட்டில் தெரிவித்தனர்.

ஸ்ரீல.சு.க. ...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

சமரவீர கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் கொள்கைகள் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படும். எமது கட்சி முற்றிலும் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றும். எமது கொள்கைகள் நாட்டின் அபிவிருத்தி, மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு வகுக்கப் படும் - மாத்தறை, காலி, களனிய, ஜா - எல உட்பட நாட்டின் பல பாகங்களிலுமிருந் தும் இக்கட்சியின் ஆதரவாளர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (சி)

பேசாலையில் .....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

என்று தகவல்கள் தெரிவிக்கையில்:

இதேவேளை, மன்னாரில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனறும் கூறப்படுகின்றது. (சி)

நிலாவெளி.....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

முன்னரே வெடித்துச் சிதறியது என்றும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப் பில் இருந்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை. (சி)

பிரிட்டனிடம்.....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

களைக் காவிச் செல்லும் வசதி கொண்டது. அல்லது இரு 'லாண்ட் றோவர்' வாகனங்களை20துருப்புக்களுடன் காவிச் செல்லும் வலுவும் கொண் டது.

கடற்படையினரின் செயற்பாட்டுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலையில் இக்கலம் இல்லாததனால் இதனை விற்பனை செய்ய அரசு முடிவு செய்து, கேள்விப் பத்திரம் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது. (அ-1)

நேற்று...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு அமுலில் இருந்தது.

மக்களின் பாதுகாப்புக் கருதியே ஊரடங்குநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. (அ-1)

பருத்தித்துறை.....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தொடர்பு கொண்டது. சடலங்களை கையேற்க விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர்.

குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையிலான தரை வழிப்போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால், மாற்று வழியாக கடலில் வைத்துச் சடலங்களை ஒப்படைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு தொடர்புகொண்டிருப்பதாக நேற்றுக் கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

தமிழ் மாவட்ட.....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றன. அப்போது வடக்கு - கிழக்கில் அம்பாறை; திருகோண மலை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய ஆறு தமிழ் மாவட்டங்களிலும் தேர்தல்கள் இம் மாதம் 30ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டிருந்தன.

அத் திகதியில் தேர்தலை நடத்தக் கூடிய சாத்தியம் உள்ளதா என்பதை ஆராய்வதற் காகதமிழ் மாவட்ட அரச அதிபர்களை, தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் சந்தித்திருந்தமை தெரிந்ததே.

தமிழ் மாவட்டங்களில் தற்போது நிலவும் சூழல் தேர்தலை நடத்துவதற்கு உகந்தல்ல என அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்திருந்தனர். (அ-1)

பொருளியல்
N.B.கஜீதரன்
கருத்தரங்கு
(3ஆவது பரீட்சைக்கானது)
இன்று (23.06.07)
பி.ப 1 மணி
விக்னா
யாழ்.நகர்

மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது
TVS SCOOTY PEP+
யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org